காவிரிப் பாசன விவசாயத்திற்கு தடையின்றி நீர் வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்!

# மேகதாது அணை கட்ட கழக அரசு ஒருபோதும் அனுமதிக்காது!

## எடப்பாடிக்கு விளக்கமளித்து - நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன் உறுதி!



சென்னை, ஜூலை 5-

காவிரி டெல்டா பாசனத்திற்கு நீர் வழங்குவது மற்றும் மேகதாது அணை பிரச்சனை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் பழனிச்சாமி 2-7-2023 அன்று எழுப்பிய வினாக்களுக்கு நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் பதில் அறிக்கை வருமாறு :-

காவிரி டெல்டா விவசாயிகளின் நலன் கருதி இவ்வாண்டும் ஜுன் 12 அன்று குறுவை சாகுபடிக்காக முதலமைச்சர் அவர்களால் மேட்டூர் அணை திறக்கப்பட்டு, தொடர்ந்து தேவைக்கேற்ப நீர் வழங்கப் பட்டு வருகிறது. மேலும் குறுவை சாகுபடி யின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, இவ்வாண்டு ரூ.61.09 கோடி மதிப்பிலான குறுவை தொகுப்புத் திட்டத் தையும் முதல்வர் அறிவித்துள்ளார்கள். டெல்டா பாசன விவசாயிகளும் சாகுபடி வேலைகளை முழு வீச்சாகச் செய்து வரு கின்றனர் என்பதை அனைவரும் அறி வோம். விவசாயம் செய்வதற்குத் தேவை யான நீர் அனைவருக்கும் சீராகக் கிடைப்பதற்கு ஏதுவாக கால்வாய்கள் முன் கூட்டியே தூர் வாரப்பட்டு நீர்ப்பங்கீடு செய் யப்பட்டு வருகிறது.

**காவிரி நீர் முறைப்படுத்தும் குழு!**

மேலும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி கர்நாடகாவிலிருந்து தமிழ்நாட்டிற்கு கிடைக்கப்பெற வேண்டிய காவிரி நீரைப் பெறுவதற்கு தேவையான முயற்சிகளை அனைத்து மட்டங்களிலும் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட் டிற்குத் தரவேண்டிய நீரினை அளிக்கு மாறு கர்நாடகாவிற்கு உத்தரவிடுமாறு காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர் அவர்களை தமிழ்நாடு உறுப்பி னர் மற்றும் அரசின் கூடுதல் தலைமைச் செயலாளர், நீர்வளத்துறை, 16.6.2023 அன்று நடந்த 21ஆம் கூட்டத்தில் வலியு றுத்தினார். கர்நாடகாவிலிருந்து ஜுன் மாதத்தில் குறைவாக வழங்கப்பட்ட நீர் குறித்தும், ஜுன் 30 அன்று நடைபெற்ற காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவின் கவ னத்திற்கு எடுத்துரைக்கப்பட்டது. தமிழ் நாடு அரசின் கூடுதல் தலைமைச் செயலா ளர், நீர்வளத்துறை, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர் அவர்களுக்கு ஜூலை 3 அன்று எழுதிய கடிதத்தில், குறைபாட்டை நிவர்த்திக்கவும், ஜூலை மாதத்தில் அட்டவணைப்படி கர்நா டகா நீர் அளிக்க அறிவுறுத்தவும் கேட்டுக் கொண்டுள்ளார். இவ்வாறு தமிழக அரசு விவசாயிகளின் பாசனத்திற்கேற்ப நீர் அளிக்கத் தேவையான எல்லா நடவடிக் கைகளையும் எடுத்து வருகிறது

கர்நாடக அரசு அவ்வப்போது மேகதாது பிரச்சனையை எழுப்புவதை வழக்கமா கக் கொண்டுள்ளது. இது அரசியல் நிர்ப்பந் தத்தினாலோ என்னவோ தெரியவில்லை. எவ்வாறு இருப்பினும் தமிழ்நாடு அரசு மேகதாது அணை கட்டுவதற்கு ஒருபோ தும் அனுமதிக்காது. கர்நாடக துணை முதல்வர் சிவகுமார் அவர்கள் பதவி ஏற்ற வுடன் மேகதாது அணை கட்டுவது குறித்து பேசிய செய்திக்கு உடனேயே நான் மறுப் புத் தெரிவித்திருந்தேன்.

அண்மையில் (30.6.2023 அன்று), கர்நாடக துணை முதல்வர் ஒன்றிய அர சின் நீர்வளத்துறை அமைச்சர் அவர்களை நேரில் சந்தித்தபோது மேகதாது அணை திட்டத்திற்கு அனுமதி குறித்து பேசியுள்ளதா கச் செய்தி வெளிவந்துள்ளது. இது வருந் தத்தக்கது. கர்நாடக அரசு உத்தேசித்துள்ள மேகதாது அணை திட்டம் உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்கு முரணானது. இத்திட்டம் குறித்து, எற்கனவே தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள், பாரதப் பிரதமர் அவர் களை நேரில் சந்தித்தபோது (17.6.2021, 31.3.2022 மற்றும் 26.5.2022) "மேகதாது அணை கட்டுவதற்கு ஒன்றிய அரசு ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது" என்பதை வலியுறுத்தியுள்ளார்கள்.

**தமிழ்நாடு அரசு முறியடிக்கும்!**

நானும், ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சரைச் சந்திக்கும்போதெல்லாம் (6.7.2021, 16.7.2021 மற்றும் 22.6.2022) இக்கருத்தை வலியுறுத்தி யுள்ளேன். ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சரும், "தமிழ்நாட்டின் இசைவில் லாமல் மேகதாது அணை கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படாது" எனக் கூறியுள் ளார்கள். இதற்கிடையே, தமிழ்நாடு அரசு இப்பிரச்சனை குறித்து தொடர்ந்துள்ள வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் நிலுவை யில் உள்ளன. தவிர, மேகதாது அணைத் திட்டம் குறித்த பொருள் பற்றி காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தில் விவா தத்திற்கு எடுத்துக்கொள்ள வலியுறுத்திய போதெல்லாம் தமிழ்நாடு அரசு மறுப்புத் தெரிவித்ததை அடுத்து, 10.02.2023, 11.04.2023 மற்றும் 16.06.2023 நாட்க ளில் நடைபெற்ற ஆணையத்தின் கூட்டங் களில் இப்பொருள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வில்லை. இத்திட்டம் தொடர் பான வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரும்போது, வலுவான வாதங்களை முன்வைத்து கர்நாடகாவின் அணை கட்டும் முயற்சிகளை தமிழ்நாடு அரசு முறியடிக்கும்.

இவ்வாறு தமிழ்நாட்டின் உரிமைக ளைக் காக்கவும், காவிரி விவசாயப் பெருங்குடி மக்களின் நலன் கருதியும், இவ் வாண்டு விவசாயத்திற்கு தடையின்றி நீர் வழங்கத் தேவையான எல்லா நடவடிக் கைகளையும் தமிழ்நாடு அரசு எடுக்கும். மேகதாது அணை பிரச்சனை குறித்தும் தக்க நடவடிக்கைகளை இவ்வரசு எடுக் கும் என்பது உறுதி. இப்பிரச்சனையில் நாம் அனைவரும் ஒற்றுமையாக செயல் படுவோம்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் தெரிவித்துள்ளார்.



ஒரகடம், சிப்காட் தொழிற் பூங்காவில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில், நேற்று முன்தினம் (03.07.2023) சிப்காட் தொழில் நண்பன் முதல் ஆண்டு சந்திப்பு (SIPCOT Bizbuddy First Annual Outreach) கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் ச.கிருஷ்ணன், சிப்காட் மேலாண்மை இயக்குநர் திருமதி எ.சுந்தரவல்லி, சிப்காட் செயல் இயக்குநர் நிஷாந்த்கிருஷ்ணா மற்றும் சிப்காட் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர்

## சு.முத்துசாமி இல்ல மணவிழா!

### அமைச்சர்கள் - கழக முன்னணியினர் பங்கேற்பு!

ஈரோடு, ஜூலை 5 -

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர் களின் நல்வாழ்த்துக்களு டன் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளரும், வீட்டு வசதி மற்றும் நகர்ப் புற வளர்ச்சித் துறை, மது விலக்கு, ஆயத்தீர்வை துறை அமைச்சருமான சு.முத்துசாமி அவர்களின் வளர்ப்பு மகள்கள் எம். சௌமியா - கார்த்திக், எம்.சுருதி - டி.பூர்ணா கிஷோர் ஆகியோரின் திருமண விழா நாளை (6.7.2023 வியாழக்கி கிழமை) காலை 7.30 மணிக்கு மேல் 8.55 மணிக் குள் ஈரோடு மேட்டுக் கடை தங்கம் மஹாலில் நடைபெற உள்ளது.

வரவேற்பு இன்று (5.7.2023 புதன்கிழமை) மாலை 6 மணிக்கு மேல் 9 மணிக்குள் நடைபெற உள்ளது.

திருமண விழாவில் அமைச்சர் பெருமக்கள், முன்னாள், இன்னாள் சட்டமன்ற, நாடாளு மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், அனைத்து கட்சி பிரமுகர்கள், கழக உடன்பிறப்புகள் உள் ளிட்ட பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்த உள்ளனர்.

திருமண விழாவிற்கான ஏற்பாடுகளை ஈரோடு தெற்கு மாவட்டக் கழக நிர்வாகிகள் சிறப்பாக செய்து வருகின்றனர்.

வினோத் காந்தி ஏற்பாட்டில்

## கலைஞர் நூற்றாண்டு விழா பட்டிமன்றம்!

### அமைச்சர் ஆர்.காந்தி பங்கேற்பு!

இராணிப்பேட்டை, ஜூலை 5 -

கலைஞர் 100 - நிகழ்ச்சி 5 - தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு கொண்டா டும் ஓராண்டு விழாவில் இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரை வியக்கும் சிந்தனை பட்டி மன்றத்தை கைத்தறி மற் றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப் பேட்டை ஆர்.காந்தி துவங்கி வைத்தார்.

இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செயலாளர் ஆர்.வினோத் காந்தி வரவேற்பு வழங்கி னார்.

இதில் ஆற்காடு சட்ட மன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன், மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே. சுந்தரமூர்த்தி, மாவட்டப் பொருளாளர் ஏ.வி.சாரதி, மாவட்டத் துணைச் செய லாளர்கள் சிவானந்தம், அமுதா, துரை மஸ்தான், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, நகரச் செய லாளர் பி.பூங்காவனம்,

மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ். வினோத், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கள் க.சுந்தரம், மு.கண் ணையன், அசோகன்,

நகர மன்றத் தலைவர் கள் சுஜாதா வினோத், ஹரிணி தில்லை மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், உள் ளாட்சி பிரதிநிதிகள் மற் றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

மாவட்ட மகளிரணி சார்பில் காரைக்குடியில்

## கலைஞர் நூற்றாண்டு பொதுக்கூட்டம்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - மு.தென்னவன் - தமிழரசி - எழிலரசி - புவியரசி சிறப்புரை!

சிவகங்கை, ஜூலை 5 -

சிவகங்கை மாவட்டத் தில் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் பொதுக்கூட் டங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி ஒன்றிய, நகர, பேரூர் பகுதி களில் நடைபெற்று வருகிறது.

இதில் சிவகங்கை மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி சார்பில் காரைக்குடி ஐந்து விளக்கு பகுதியில் மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன் தலைமையில் நடைபெற்றது.

நகர்மன்றத் தலைவர் செ.முத்து துரை, நகரச் செயலாளர் என்.குணசேக ரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டமகளிர் தொண் டரணி அமைப்பாளர் திருமதி.ஹேமலதா செந்தில் வரவேற்றுப் பேசினார்.

இந்த பொதுக்கூட்டத் தில் மாவட்டச் செயலாள ரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன், மாநில இலக்கிய அணி புரவலர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல். ஏ., முனைவர் எழிலரசி, தலைமை கழகப் பேச்சாளர் குடியாத்தம் புவியரசி ஆகி யோர் சிறப்புரையாற்றினர்.

இந்த பொதுக்கூட்டத் தில் மாவட்ட அவைத்தலை வர் அ.கணேசன், மாவட்ட பொருளாளர் சுப. துரை ராஜ், மாவட்டத் துணைச் செயலாளர்கள் த.சேங்கை மாறன் திருமதி ஜோன்ஸ் ரூசோ, கே.எஸ்.எம்.மணி முத்து, முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பா ளர் நாகனி செந்தில்குமார், நகர்மன்றத் தலைவர் மாரி யப்பன், கென்னடி, தலை மைக் கழகப் பேச்சாளர் பா.கணேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் மதார்சேட், பள்ளத்தூர் கே.எஸ்.ரவி, கரு.அசோகன், ஜெய மூர்த்தி, மு.சோமசுந்தரம், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி. ராஜ்கு மார், மாவட்ட மகளிர் அணி நிர்வாகிகள் மார்கி ரேட் கமலா, திலகவதி கண் ணன், கலாராணி ராஜா, அழகுப்பிள்ளை குணசேக ரன், பாக்கியலட்சுமி, சண் முகப்பிரியா, சுதா சிவபிர காசம், ராஜேஸ்வரி சேகர், திவ்யா காரை சக்தி, குழந்தை தெரசா ஆனந்தம், பாண்டிஅம்மாள், தமிழ்ச் செல்வி, சங்கீதா, சித்ரா, புகழேந்தி சித்திரவேலு, நிர் மலா செல்வம், மஞ்சரி லட் சுமணன்,

நகரச் செயலாளர்கள் பெரி.பாலமுருகன், க. பொன்னுச்சாமி, ஒன்றியச் செயலாளர்கள் சுப.சின்ன துரை, கே.ஆர்.ஆனந்த், லெ.மூரவிச்சந்திரன், பூபால சிங்கம், நாகனி ரவி, நா.நெடுஞ்செழியன், குன் னக்குடி சுப்பிரமணியன், எம் .ஜெயராமன், பேரூர்ச் செயலாளர்கள் பக்குருதீன், நஜ்முதீன் மற்றும் சன். சுப்பையா, சொ.கண்ணன், உதயம்ராசு, பெரி.வைரவன், லட்சுமி, சே.சொக்கலிங்கம், அ.சேவியர், ஜான்கென்னடி, போஸ்.குணசேகரன், நகர மன்ற உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக மகளிர் அணி நிர்வாகிகள் கலந்து கொண் டனர்.

முன்னதாக அபி குழுவி னரின் இன்னிசை நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பெண்களுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் பெரியகருப்பன் முன்னாள் அமைச்சர் மு. தென்னவன் ஆகியோர் வழங்கினார்கள்.

மாவட்ட மகளிரணி தலைவி திருமதி மு.மணி மேகலை நன்றி கூறினார்.

பொதுக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மாவட்ட மகளிரணி மற்றும் மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் செய்திருந்தனர்.

கடும் ஊழல் குற்றச்சாட்டுகளை சந்தித்து வருபவர்களை புனிதர்களாக மாற்றும்

# பா.ஜ.க.வின் 'வாஷிங் மெஷின்' மீண்டும் செயல்பட தொடங்கி விட்டது!

புதுடெல்லி, ஜூலை 5–

மகாராஷ்டிராவில் ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான பா.ஜ.க. கூட்டணி ஆட்சி யில், தேசியவாத காங்கிரஸ் தலைவர் அஜித் பவார் மற்றும் 8 பேர் அமைச் சர்களாக சேர்க்கப்பட்டதை அடுத்து, பா.ஜ.க.வை எதிர்க்கட்சிகள் கடுமை யாக சாடி உள்ளன.

## எதிர்க்கட்சித் தலைவர்கள் கண்டனம்!


**ஜெய்ராம் ரமேஷ்**
**(காங். பொதுச் செயலாளர்)**



பா.ஜ.க.வின் வாஷிங் மெஷின் மீண்டும் செயல்பட தொடங்கி உள்ளது.

மகாராஷ்டிராவில் பா.ஜ.க. தலைமை யிலான கூட்டணியில் இன்று புதிதாக சேர்ந் துள்ள பலர் அமலாக்கத்துறை, சி.பி.ஐ. மற்றும் வருமான வரித் துறையால் கடுமையான ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர் கொண்டுள்ளவர்கள். அவர்கள் அனைவரும் இப்போது புனித மாகி விட்டனர்.

**அசோக் கெலாட்**
**(ராஜஸ்தான் முதல்வர்)**



மகாராஷ்டிராவில் ஏற்பட்டுள்ள அரசி யல் மாற்றம், பணபலம் மற்றும் ஒன் றிய விசாரணை அமைப்புகளை கொண்டு எதிர்க்கட் சிகளை பா.ஜ. ஒழிக்க விரும்பு கிறது என்பதைக் காட்டுகிறது.

இது மிகவும் கண்டிக் கத்தக்கது.

பா.ஜ. எவ்வளவு முயற்சி செய் தாலும், ஜனநாயகத்தை கொல்லும் இந்த முயற்சிகளை முறியடிக்கும் நேரம் வரும் போது அதற்கு தகுந்த பதிலடி கொடுப்போம் என்று பொது மக்கள் முடிவு செய்துள்ளனர்.

**பபுல் சுப்ரியோ**
**(திரிணாமுல் காங்.,)**



ஊழல்வாதிகளை அமைச்சராக்கிய பிறகு பா.ஜ.வும், பிர தமர் மோடியும் இனி ஊழலுக்கு எதிராக போராடுவது பற்றி பேச முடியாது. ஊழல் கறை படிந்த தலை வர்கள் இப்போது தங்கள் கறையை போக்க பா.ஜ.வின் வாஷிங்மெஷினில் இணைந்துள்ளனர்.

**பிரியங்கா சதுர்வேதி**
**(உத்தவ் தாக்கரேவின் சிவசேனா)**



கொள்கைகள் கெட்டுவிட்டது. கருத்தியல் கூட்டணி பற்றி பேசும் நாட்டின் கடைசி கட் சியாக பா.ஜ. இருக்க வேண் டும்.

அவர்கள் அதிகாரத்தை விரும்பும் அரசியல் சந்தர்ப்ப வாதிகள்.

**அகிலேஷ் யாதவ்**
**(சமாஜ்வாடி கட்சி தலைவர்):**



மத்தியப் பிரதேசத்திற்குப் பிறகு மகாராஷ்டிரா பா.ஜ.வின் பெரிய ஆய்வக மாக உருவெடுத்துள்ளது. 2024 மக்களவைத் தேர்த லுக்கு முன்பாக அவர்கள் ஆட்சியை தக்க வைக்க இன் னும் பல சோதனைகளை செய் வார்கள். மக்கள் இதைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

**டி.கே.எஸ்.இளங்கோவன்**
**(தி.மு.க.)**



பாட்னாவில் நடந்த எதிர்க்கட் சிகள் கூட்டத்திற்கு பிறகு பா.ஜ. பயப்படுகிறது. அத னால்தான் அவர்கள் எதிர்க்கட்சி களை உடைக்க விரும்பு கிறார்கள்.

**ராஜீவ் ரஞ்சன் சிங்**
**(ஐக்கிய ஜனதா தளம்):**



பா.ஜ.வுக்கு மக்கள் சக் தியில் நம்பிக்கை இல்லை, அவர்கள் கட்சித் தாவல் அர சியலை மட்டுமே நம்புகிறார்கள். இந்த முறை அவர்க ளுக்கு ஒரு பெரிய அதிர்ச்சி கிடைக்கும்.

**மெகபூபா முப்தி**
**(பிடிபி கட்சி தலைவர்)**



மகாராஷ்டிராவில் மக்கள் ஆணையை பா.ஜ. மீண்டும் மீண்டும் குறை மதிப் பிற்கு உட்படுத்தும் விதத்தை கண்டிக்க வார்த்தைகள் போதாது. ஜனநாய கம் அழிக்கப்படு வது மட்டுமல்லா மல், இதுபோன்ற அவமானகரமான செயல்களுக்கு மறைமு கமாக தேசிய கீதத்தை பயன்படுத்து கின்றனர். ஒருபுறம், பா.ஜ. அரசி யல் எதிரிகளை ஊழல் குற்றச்சாட்டின் கீழ் கைது செய் கிறது, மறுபுறம் அவர்களே எம். எல்.ஏ.க்களை விலைக்கு வாங் கும் வேட்டையில் ஈடுபடுகின் றனர். பா.ஜ.வின் அதிகார தாகத்தை தீர்க்க மக்களின் பணம் தவறாக பயன்படுத்தப்படுகிறது.

**சஞ்சய் சிங் (ஆம் ஆத்மி தேசிய செய்தி தொடர்பாளர்)**



நாட்டின் மிகப் பெரிய ஊழல் பேர்வழி நரேந்திர மோடி. ஊழ லுக்கு எதிரான நடவடிக்கைக்கு பிரதமர் மோடி உத்தரவாதம் அளித்த 2 நாட்களுக்குப் பிறகு, மகா ராஷ்டிராவில் சிவசேனா பா.ஜ. கூட் டணி அரசில் துணை முதல்வராக அஜித் பவார் நியமிக்கப் பட்டுள்ளார். புஜ்பாலும் அமைச்சரவையில் சேர்க் கப்பட்டுள்ளார். இதற்காக அனைத்து தொலைக்காட்சி சேனல்களும் மோடியை கண்டிக்கும்.



**சரத்பவாருக்கு**
**கார்கே, ராகுல் ஆதரவு!**

காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே மற்றும் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி ஆகியோர் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவாரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஆதரவு தெரிவித்ததாக காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி.வேணு கோபால் தெரிவித்துள்ளார்.

**அமலாக்கத் துறையால்**
**பறிக்கப்பட்ட அதிகாரம்!**

அவர் தனது டிவிட்டரில், ''பா.ஜ.வின் மோசமான அரசியல் சூழ்ச்சி மகாராஷ் டிராவில் அத்துமீறி செயல்படுகிறது. இது சட்டப்பூர்வமாக தேர்ந்தெடுக்கப் பட்ட அரசு அல்ல.

மாறாக, அமலாக்கத்துறை உதவியு டன் அதிகாரம் பறிக்கப்பட்டுள்ளது. மகாராஷ்டிரா அரசு, ஊழல் மற் றும் பாவத்தின் அறுவடை. இந்த சமயத்தில் கார்கே, ராகுல் ஆகியோர் சரத்ப வாருடன் பேசி தங்கள் ஆதரவை தெரிவித்துள்ள னர்'' என கூறி உள்ளார்.